IBSL
INSURANCE BOARD OF SRI LANKA

(ESTABLISHED UNDER ACT NO.43 OF 2000)

## இலங்கை காப்புறுதிச் சபை

(காப்புறுதி தொழிலை ஒழுங்குபடுத்துவோர்)

# பொது மக்களுக்கான முக்கிய அறிவித்தல்

## காப்புறுதிப் பிரேரணைப் பத்திரங்கள்

எதிர்காலக் காப்புறுதிப் பத்திர உரிமையாளர்களினால் காப்புறுதி உடன்படிக்கையொன்று செய்யப்படும் போது முறையாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டிய காப்புறுதிப் பிரேரணைப் பத்திரத்தின் மீது தங்களது கவனம் இத்தால் ஈர்க்கப்படுகின்றது.

காப்புறுதிப் பிரேரணைப் பத்திரமானது எதிர்காலக் காப்புறுதிப் பத்திர உரிமையாளர்களுக்கு அவரால் எதிர்பார்க்கப்படும் காப்பளிப்பு மற்றும் பயன்கள் தொடர்பாக காப்புறுதிக் கம்பனியொன்றிடம் விடுக்கப்படும் கேள்விக்கு காப்புறுதிக் கம்பனியொன்றினால் வழங்கப்படும் ஆவணமொன்றாகும்.

பிரேரணைப் பத்திரமானது கேள்விக் கொத்தொன்றைப் போன்று பொதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், பிரேரணையில் குறிப்படப்படும் காப்புறுதித் தொழிலின் வேறுபட்ட வகுப்புகள், உப வகுப்புகள் சார்ந்ததாக அதனால் வேண்டப்படும் தகவல்கள் முழுமையாக வெளிப்படுத்தல் தேவைப்படுத்தப்படுகின்றது. உதாரணமாக, பிரேரணை ஓர் ஆயுற் காப்புறுதிப் பத்திமொன்றாக இருப்பின் உங்களுடைய ஆரோக்கியம் பற்றிய உண்மையான தகவல்கள் வழங்கப்படவேண்டும் என்பதுடன் (கடந்த மற்றும் தற்போதைய சுகாதார நிலைமைகள்),தனிப்பட்ட விவரங்களுக்கு மேலதிகமாக தொழில், பழக்க வழக்கங்கள், உத்தியோகம் என்பனவும் வழங்கப்படுதல் தேவைப்படுத்தப்படுகின்றது. கேள்விகளுக்கான பதில் தங்களது அறிவுக்கும் உங்களது நம்பிக்கைக்கும் உட்பட்டவாறு உண்மொனதாக இருத்தல் வேண்டும் என்பது மிக முக்கியானதாகும். குறிப்பிட்ட விடயங்கள் பற்றிய சந்தேகமிருப்பின் அவற்றை வெளிப்படுத்துதல் உங்களுடைய விருப்புக்குட்பட்டதாகும்.

இந்தப் பிரேரணைப் படிவத்தைப் பூர்த்தி செய்து அதில் உங்கள் கையொப்பமிடுவதற்கு முன்னர் அதில் வெளியிடப்பட்டுள்ள விவரங்களின் சரியான தன்மையைக் கவனமாகப் பரீட்சித்துப் பார்க்குமாறும் வேறு ஒரு ஆள் மூலம் இப் பிரேரணைப் படிவம் பூர்த்தி செய்யப்படுமாயின் அதில் தரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் சரியானவையும் உண்மையானவையும் ஆகும் எனவும் குறித்துக் காட்டப்படல் வேண்டும் எனவும் நீங்கள் மேலும் அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

உங்களால் செய்யப்பட்ட வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்படுவதன் பொருட்டு பிரேரணைப் பத்திரத்தில் அடங்கியுள்ள விடயங்கள் அனைத்தும் காப்புறுதிக் கம்பனியினால் தரப்படுத்தி மதிப்பீடு செய்யப்படும். ஆகையால், பொருத்தமான தகவல்களை வெளிக்காட்டத் தவறும் பட்சத்தில் காப்புறுதிக் கம்பனியினால் பொறுப்பேற்கப்படவுள்ள அபாயங்கள் பற்றி சரியாகப் புரிந்து கொள்ள இயலாது போகும். மேலும் காப்புறுதிப் பிரேரணைப் படிவமானது அதிகளவு முக்கியமானதாகும் என்பதுடன் அது காப்புறுதி உடன்படிக்கையின் அடிப்படையை உருவாக்குகின்றதென்பதுடன் வெளிப்படுத்தாமல் இருத்தல் அல்லது விடயங்களை தவறான முறையில் முன்வைத்தலானது எதிர்காலத்தில் காப்புறுதிக் கோரிக்கைகள் தள்ளிவைக்கப்படவும் காரணமாக அமையலாம்.

ஆகையால், முக்கியான உண்மைகளை வெளிப்படுத்தாமல் இருத்தல் அல்லது விடயங்களை தவறான முறையில் முன்வைத்தல் மூலம் கோரிக்கைகள் தள்ளிவைக்கப்படுவதனைத் தவிர்த்துக் கொள்வதன் பொருட்டு எதிர்காலக் காப்புறுதிப் பத்திர உரிமையாளர்கள் சரியான தகவல்களை வழங்கி காப்புறுதிப் பிரேரணைப் பத்திரங்களைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.


**இலங்கை காப்புறுதிச் சபை**
(நிதி, திட்டமிடல் அமைச்சு)
11 ஆம் மாடி, கிழக்குக் கேபுரம்
உலக வர்த்தக மையம்
எச்சிலன் சதுக்கம்
கொழும்பு 01
தொலை பேசி: 011 – 2396184-9 , தொலை நகல்: 011 - 2396190
ஈ-மெயில்: info@ibsl.gov.lk, இணையதளம்: www.ibsl.gov.lk